**EMBARGOED UNTIL NOVEMBER 14, 2016 12:01 A.M. EST**

**Contact:**
**Joshua Shen, Information Officer, U.S. Embassy Colombo, ShenJY@state.gov**
**Sharon Witherell, Institute of International Education, switherell@iie.org**
**Bureau of Educational and Cultural Affairs, U.S. Department of State, ECA-Press@state.gov**

## அமெரிக்காவில் கற்கும் இலங்கை மாணவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு - *Open Doors* அறிக்கை தெரிவிக்கின்றது

**நவம்பர் 16, 2015** –அமெரிக்க கல்லூரிகளிலும், பல்கலைக்கழகத்திலும் 3080 இலங்கை மாணவர்கள் கற்பதாகவும், 2014-2015 கல்வியாண்டு காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது, இந்த எண்ணிக்கை 6.9 வீத அதிகரிப்பாகும் எனவும் 2016ஆம் ஆண்டுக்கான *Open Doors*இன் புதிய அறிக்கை தெரிவிக்கின்றது.

மொத்தத்தில், 2015-16 கல்வியாண்டில் அமெரிக்க கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் சர்வதேச மாணவர்களின் எண்ணிக்கை ஒரு மில்லியனை கடந்து, அண்ணளவாக 1,044,000ஆக பதிவாகியுள்ளது. உயர் கல்விக்கான சிறந்த தெரிவாக அமெரிக்கா உள்ளமையை இந்த எண்ணிக்கை வளர்ச்சி உறுதி செய்கின்றது.

*“இலங்கை உலகளாவிய பொருளாதாரத்தில் வெற்றி பெறுவதற்கு தேவையான அறிவினையும், திறன்களையும் விருத்தி செய்வதற்கும், சர்வதேச புரிந்துணர்வை மேம்படுத்துவதற்கு எல்லைகளைக் கடந்து வலையமைப்புக்களை உருவாக்குவதற்கும், அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்பினை வலுப்படுத்துவதற்கும் சர்வதேச கல்வியானது உதவுகின்றது”* என இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான அமெரிக்கத் தூதரகத்தின் பிரதி தூதுவர் ரொபர்ட் ஹில்டன் தெரிவித்தார்.

நாட்டின் அபிவிருத்திக்கு வசதியளிப்பதற்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இலங்கை மாணவர்களுக்கு விஞ்ஞான, தொழில்நுட்ப, பொறியியல் மற்றும் கணித (STEM) பாடவிதானம் இன்றியமையாதது என இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் சுட்டிக்காட்டுகின்றது. அமெரிக்காவில் கல்வி கற்கும் இலங்கை மாணவர்களில் ஐம்பது வீதமானவர்கள், கலாநிதி மட்டம் வரையான பட்டப்படிப்பினையும், பட்டம் பெற்றதன் பின்னர் 29 மாதங்கள் வரை தொழில்சார் பயிற்சியில் பங்குபற்றுவதற்கு STEM தளங்களில் சர்வதேச பட்டதாரி மாணவர்களுக்கு வாய்ப்பளிக்கும் பட்டப்படிப்பிற்கு பிந்தைய தெரிவுசார் பிரயோக பயிற்சிகளை 16 வீதமானோரும் முன்னெடுக்கின்றனர். சர்வதேச கல்வி வாரத்தை (IEW) முன்னிட்டு அமெரிக்க-இலங்கை Fulbright Commissionஉடன் இணைந்து அமெரிக்கத் தூதரகமானது பல்வேறு நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்துள்ளது. இதன் ஒரு

அங்கமாக அமெரிக்காவில் கல்வி கற்பதற்கான சந்தர்ப்பங்களில் ஆர்வமாக உள்ள மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்குமான இலவச கல்வி நிகழ்வு ஒன்று நவம்பர் 19ஆம் திகதி, பி.ப 2.00 மணி முதல் பி.ப 5.00 மணி வரை தாஜ் சமுத்ரா ஹோட்டலின் லொங்டன் அறையில் நடைபெறவுள்ளது.

ஒரு தசாப்தத்திற்கு முன்னர் அறிக்கையானதற்கு மாறாக, இன்று 85 வீதத்திற்கும் அதிகமான சர்வதேச மாணவர்கள் அமெரிக்க கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் கற்கின்றனர். அமெரிக்க உயர் கல்வியில் சர்வதேச மாணவர்களின் மொத்த எண்ணிக்கையில் அதிகரிப்பினை தொடர்ச்சியாக பத்தாவது வருடமாக *Open Doors* பதிவு செய்துள்ளது. அமெரிக்காவின் 20 மில்லியனுக்கும் மேற்பட்ட மாணவர்களில் ஐந்து வீதத்திற்கும் அதிகமான சர்வதேச மாணவர்கள் தற்போதுள்ளனர். கடந்த வருடங்களில் இந்த அளவு சுமார் நான்கு வீதமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

கல்வி மற்றும் கலாசார விவகாரங்களுக்கான அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பணியகத்துடன் இணைந்து சர்வதேச கல்வி நிறுவனத்தினால் வருடாந்தம் *Open Doors*® அறிக்கை வெளியிடப்படுகின்றது. உலகளாவிய சூழலுக்கு அமெரிக்கர்களைத் தயார் செய்வதற்கு மற்றும் அமெரிக்காவில் கற்பதற்கு, அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்கு வேறு நாடுகளைச் சேர்ந்த எதிர்காலத் தலைவர்களை ஈர்ப்பதற்கு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம், மற்றும் அமெரிக்க கல்வித் திணைக்களத்தின் ஒன்றிணைந்த முயற்சியாக நவம்பர் 14-18 வரையான, சர்வதேச கல்வி வாரத்தினைப் பொருட்டு புதிய தரவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

சர்வதேச கல்வி பரிமாற்றம் தொடர்பான 2016ஆம் ஆண்டுக்கான *Open Doors* அறிக்கை குறித்த மேலதிக தரவுகள், மற்றும் ஆதாரங்களுக்கு விஜயம் செய்யுங்கள்: http://www.iie.org/ Open-Doors.

# # #




**Caption:** The U.S. Embassy and the U.S.-Sri Lanka Fulbright Commission is hosting a free education outreach fair on November 19 from 2:00 – 5:00 p.m. at the Longdon Room in the Taj Samudra for parents and students interested in opportunities to study in the United States.